# ஐக்கியதீபம்

யாழ்ப்பாணம் 1969 ஆவணி

மலர் 24

வடபகுதி
ஐக்கிய
மேற்பார்வைச்
சபையின்
வெளியீடு

இதழ் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| | | ரூபா-சதம் |
|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் | -03 |
| 2. | கடன் முறி | -03 |
| 3. | மத்தியஸ்தர் மனு | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் | -03 |
| 5. | அங்கத்தவர் பாஸ்புத்தகம் (நாணய சங்கம்) | -25 |
| 6. | ப. நோ. கூ. ச. ,, | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு | 7-25 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) | 6-00 |
| 10. | கடன் இடாப்பு | 3-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு | 1-50 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) | 7-00 |
| 14. | சிட்டைப்புத்தகம் பண்டசாலை 20/1 | 3-00 |
| 15. | ,, 18/1 | 7-00 |
| 16. | ,, 6/1 | 3-00 |
| 17. | மனேஜர் பிணைப்பத்திரம் | -20 |
| 18. | பொருள் பேரேடு (பண்டசாலை) | 6-00 |
| 19. | அங்கத்தவர் மனுப்பத்திரம் | -03 |
| 20. | பங்கு இடாப்பு | 3-50 |
| 21. | பங்குப் பணச் சிட்டை | 1-00 |
| 22. | விலைபொருள் இடாப்பு | 3-50 |
| 23. | உப-விதிகள் ப. நோ. கூ. சங்கம் | -40 |
| 24. | விவசாயக் கடன் மனுப்பத்திரம் | -05 |
| 25. | விவசாயக் கடன் முறி | -06 |
| 26. | விவசாயக் கடன்—இணைப்பு i | -03 |
| 27. | விவசாயக் கடன்—இணைப்பு (புத்தகம்) ii | 6-75 |
| 28. | விவசாயக் கடன்—இணைப்பு iii | 3-00 |
| 29. | விவசாயக் கடன்—இணைப்பு iv | 3-30 |
| 30. | நெசவுச் சங்க உபவிதி | -40 |
| 31. | ப. நோ. கூ. ச. காசுப் புத்தகம் புதியது | 6-00 |
| 32. | விற்பனைச் சிட்டை 8/1 | 3-50 |
| 33. | சமாசங்களின் கணக்குமுறை | 3-50 |
| 34. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதி | -45 |
| 35. | கடற்றொழிலாளர் கூ.வி. சங்க உபவிதிகள் | -75 |

**வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1686

ஆசிரியர் தலையங்கம்

கூட்டுறவுச் செய்திகள் 5

கிராமப்புறங்களில் ப. நோ. கூ. சங்கங்கள் 13
—வி. இளங்கோ

கும்மி ... 12

எமது கிராமச் சந்தை .... 13

வ. மா. க. தொ. கூ. சங்கங்களின் சமாசம்
வலை விநியோகம் செய்யத்தான் வேண்டுமா? ... 15
—ச. ஸ்ரனிஸ்லாஸ்

**சிறுகதை:**

சாவின் நினைவு இருக்கட்டும் ... 18
—ஆடலிறை

ஒலிம்பிக் விளையாட்டின் புனிதப்பண்பாட்டு நோக்கங்களும் XIX
ஒலிம்பிக் போட்டியும் ... 23
—ம. அ. பிரகாசராசா

**காவியம்:**

தவம் 29
—காரை செ. சுந்தரம்பிள்ளை

**அட்டைப்படம்:**

நல்லைநகர் தந்த நாவலர் சிலை பவனி வரும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையற்ற புகையின்பம் தருவது

# J.M.T. ரதி பீடி

காரம், மணம், குணம் யாவும் நிறைந்தது

## J.M.T. ரதி பீடி

சிறந்த புகையிலைக் கலவைகளைக் கொண்டு
கைதேர்ந்தவர்களின் மேற்பார்வையின்கீழ்
தயாரிக்கப்படுவது

## J.M.T. ரதி பீடி

மக்கள் விரும்புவது

## J.M.T. ரதி பீடி

இன்றே வாங்கிப் பாவித்துப் பயனடையுங்கள்
எங்கும் கிடைக்கும்

## J.M.T. ரதி பீடி

உற்பத்தியாளர்கள்:

**யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை**
**ஐக்கிய வியாபாரச் சங்கத்துடன்**

உங்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்

தொலைபேசி இல: **543**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# ஐக்கியதீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஆசிரியர்: து. சீனிவாசகம், B. A., J. P.

| மலர் 24 | யாழ்ப்பாணம் 1969 ஆவணி | இதழ் 12 |
|---|---|---|

## விலைக் கட்டுப்பாடு

இப்போது அருந்தலான பொருள்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. இக்கட்டுப்பாடு இல்லையாயின் அப்பொருள்களை ஏழைமக்கள் வாங்க இயலாதவாறு விலை கூட்டப்பட்டுவிடும். அப்பொருள்கள் பதுக்கல் செய்யப்பட்டு கள்ளச் சந்தையில் மிகவும் கூடுதலான விலைக்கு விற்கப்படுகின்றன. பதுக்கல்செய்வோரையும், கட்டுப்பாட்டுவிலைக்கு மேலாகப் பொருள்களை விற்போரையும் கண்டுபிடித்துத் தகுந்த தண்டனை கொடுப்பதற்கு உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் பொலீஸ் நீதிமன்றம் ஆதிய நிறுவனங்கள் தொழிற்பட்டுவருகின்றன. பொருள்களைப் பதுக்கல் செய்வோரும், கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலாக விற்போரும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். அப்படியிருந்தும் பொருள்கள் பதுக்கல் செய்யப்பட்டும் வருகின்றன. மக்களின் சுயநலமும், விரும்பத் தகாத குணாதிசயங்களுமே இதற்குக் காரணங்களாகும். இப்போதைய கட்டுப்பாடுகள் இல்லையாயின் பற்றாக்குறையான அத்தியாவசிய பொருள்கள் ஏழைமக்களுக்குக் கிடைக்காதவாறு போய்விடும்.

இப்பொருள்களை ஏழைமக்களுக்கு விநியோகிக்கும் சேவையில் கூட்டுறவுத் தாபனங்கள் அரசாங்கத்திற்குப் பேருதவி செய்து வருகின்றன. ஆயின் அநேக கூட்டுறவுத் தாபனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய முதலில்லாமை யால் இத்தகைய தொண்டைச் செய்ய இயலாதிருக்கின்றன. சில முகாமையாளர்களின் பிழையான போக்குகளும், நிருவாகசபையும் உத்தியோகத்தர்களும் தமது கடமைகளைச் செய்யாது விடுவதும் மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சேவல நிலைக்குக் காரணங்களாகும்.

நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாட்டுவிலையில் கணிசமான இலாபம் வைக்கப்பட்டிருக்கிறது. பிரகடனப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுவிலை வியாபாரிகளும் கூட்டுறவுத் தாபனங்களும் விற்கவேண்டிய உச்ச விலையாகும். தேவையெனக் கண்டால் விற்பனவுத் தாபனங்கள் இவ்விலையைக் குறைத்து விற்கலாம். சேவையை நோக்கித் தொண்டாற்றுவதான கூட்டுறவுத் தாபனங்கள் இதுவிடயத்தில் வழிகாட்டிகளாக இருத்தல் வேண்டும். விற்பனைக்குரிய பொருள்களை விற்பனைத் தாபனங்கள் நடுவரிடம் வாங்காது உற்பத்தி செய்யப்படுமிடங்களில் வாங்குவதால் சந்தை விலையிலும் பார்க்க விற்பனவு விலையைக் குறைக்கலாம். இம்முறையைக் கையாண்டு தமிழ்நாடு, திருவல்லிக்கேணியில் தொண்டாற்றிவரும் கூட்டுறவுச் சங்கமும் அதன் கிளைகளும் சந்தை விலையைக் கட்டுப்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன.

இங்கிலாந்து போன்ற இடங்களில் உற்பத்தியாளர்கள் தமது பொருள்களை விற்பனை செய்வதற்கு அவற்றிற்கு இருவிலைகளைக் குறிக்கிறார்கள். தாம் வியாபார விலைக்கு விற்கும் விலை ஒன்று. அப்பொருள்களை வியாபாரிகள் பாவனையாளருக்கு விற்பதற்கு கூடுதலான விலை மற்றொன்று. அங்கு கூட்டுறவுத் தாபனங்கள் குறிக்கப்பட்ட இரண்டாம் விலையிலும் பார்க்கக்குறைவான விலைக்குப் பொருள்களைப் பாவனையாளருக்கு விற்கக் கூடியதாக இருந்தும், கட்டுப்பாடு இதற்கு இடங்கொடுக்காதிருக்கிறது.

பாவனையாளரில் ஒரு சிலர் விலைக்கட்டுப்பாட்டை விரும்புகின்றனர் அல்லர். தாம் பல விடங்களிலும் விசாரித்துக் குறைந்த விலைக்குத் தரமான பொருள்களை வாங்க விருப்பப்படுகிறார்கள். வேறு சிலர் வியாபாரிகளால் ஏமாற்றுப்படாதிருப்பதற்கு அரசாங்கக் கட்டுப்பாட்டை விரும்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் செய்திகள்

## கூட்டுறவுச் சட்டம் மத்தியட்சகருக்கு இருக்கும் உரிமையினைப் பறிக்க முடியாது

தொழிற் பிணக்கு முறியின் படி நியாயமான தீர்ப்பு வழங்குவதற்கு மத்தியட்சகருக்கு இருக்கும் சட்ட உரிமையினை கூட்டுறவுச் சட்ட உபவிதி 53 பறிக்க முடியாதென இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பினை வழங்கியவர் நீதியரசர் T.S.பெர்ஞண்டோ ஆவர். இத்தீர்ப்பு புதிய சட்ட அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

காலி கூட்டுறவு பண்டசாலை சமாசத்திற்கும், தென்னிலங்கை ஜனநாயகத் தொழிலாளர் சங்கத்திற்குமிடையே ஏற்பட்ட வழக்கைத் தொடர்ந்தே உயர்நீதி மன்றத்திற்கு மனுச்செய்யப்பட்டது. காலி சமாசம் ஹெட்டி ஆராய்ச்சி என்னும் ஊழியரை வேலை நீக்கம் செய்தது. இவ்வூழியரின் சார்பாக தென்னிலங்கை ஜனநாயகத் தொழிலாளர் சங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க விழைந்தது. இப்பிணக்கினை விசாரித்த மத்தியட்சகர் அவ்வேலை நீக்கம் நியாயமற்றதென்றும், ஆனல் கூட்டுறவுச் சட்டம் தனது சட்ட உரிமையினைப் பறித்து விடுவதனுல் தொழிற் பிணக்கு முறியின்படி தான் தீர்ப்பு வழங்க முடியாதென்றும் கூறினர். தனக்கு அவ்வித உரிமையிருந்தால் தான் எதுவித தயக்கமும் இன்றி ஒன்றில் அவ்வூழியர் அவருக்குச் செல்மதியான பழைய சம்பளத்துடன் மீண்டும் வேலைக்கமர்த்தப்படவேண்டும்என்றே அல்லது அவருக்கு நியாயமான நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றே தீர்ப்பளித்திருப்பார் என குறிப்பிட்டார்.

இதனை ஆட்சேபித்தே தொழிலாளர் சங்கம் உயர் நீதிமன்றத்திற்கு மனுச் செய்தது. மத்தியட்சகர் இனி தீர்ப்பு வழங்கலாம் என்றும், அவர் வேண்டுமெனக் கருதினல் இரு சாராருக்கும் தமது நியாயங்களை எடுத்துரைக்க இன்னெரு வாய்ப்பினை அளிக்கலாம் என்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் தனது தீர்ப்பிலே தெரிவித்தார். மேலும், மனுவிற்கான செலவுகளை காலி சமாசம் தென்னிலங்கை ஜனநாயகத் தொழிலாளர் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்றும் பணித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேருதமைக்குக் காரணம்

''காற்று, மழை, வெய்யில் என்று பாராது கஷ்டப்பட்டு கடற்ருெழிலாளர்கள் உழைப்பவர்கள். இவ்வாறு கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தைச் சேமிக்காது செலவழிப்பதுதான் அவர்கள் முன்னேருதமைக்குக் காரணம்'' இவ்வாறு மாதகல் கோவிற்பற்று கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மீன்பிடி ஆலோசனைச் சபை அங்கத்தவர் திரு. ச. ஸ்ரனிஸ்லாஸ் குறிப்பிட்டார்.

நிரந்தரமற்ற வருமானம், எதிர்பாரத தொழில் அழிவுகள், வள்ள இயந்திரங்கள் பழுதடைதல், இவையெல்லாம் சேமிக்கத் தடையாக உள்ளன என்பது உண்மைதான்; ஆனல் சேமிப்பின்றி கடற்ருெழிலாளருக்கு விமோசனம் இல்லை என்பதை மறந்துவிடக்கூடாது என்று மேலும் பேசுகையில் வலியுறுத்திய திரு. ஸ்ரனிஸ்லாஸ் விவசாயிகள் சேமிப்பால் வளர்ச்சியடைந்து உயர்ந்துவிட்டார்கள் என்று சுட்டிக்காட்டினர்.

# நாட்டின் முதுகெலும்பு

தொழிலாளர்களே நாட்டின் முதுகெலும்பு என வ. ஐ. மே. சபை நிருவாகக் காரியதரிசி திரு. பொ. செல்வரத்தினம் வகுப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தின் 8வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர். திரு. S. தில்லையம்பலம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தொழிலாளர் தம்மிடையே பிளவுகள் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்; ஏனெனில், இவை வளர்ச்சியைப் பாதிக்கும் என தொடர்ந்து பேசுகையில் அவர் விளக்கினர்.

தொழிலாளர் முன்னேற்றமடையவேண்டுமானல் அவர்களிடையே ஒற்றுமையும், சுயநலமின்மையும், ஒழுங்கும் இருக்கவேண்டும் என கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் (அபிவிருத்தி) திரு. V. கனகசபை சுட்டிக்காட்டினர்.

திரு. J. F. சிங்மறிங்கம் துறைமுகத் தொழிலாளர் சேவைச் சமாசத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை விளக்கினர்.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: S. தில்லையம்பலம், தனதிகாரி: திரு. N. நடராசா, திருவாளர்கள் C. மார்க்கண்டு, V. செல்லையா, N. பொன்னையா S. சுப்பையா ஆகியோர் நிருவாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும்

மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தியமைக்கப்படாவிட்டால் அவை திறம்பட இயங்கமாட்டா என வ. ஐ. மே. சபை தனதிகாரி திரு. மு. கணபதிப்பிள்ளை மயிலிட்டியில் நடைபெற்ற கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கருத்தரங்கில் பேசுகையில் கூறினர். கூட்டுறவுச் சங்கங்கள் திறம்பட இயங்கவேண்டும் என்பதற்காக அவைகளுக்கு கல்வியூட்டவேண்டும் என்பதும் வ. ஐ. மே. சபையினது குறிக்கோளகளில் ஒன்ருகும் என தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டார். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கடற்றொழிலாளருக்குக் கடன் கொடுப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்வதற்குச் சேவை செய்ய வேண்டும் என்ருர். நவீன முறைகளைக் கையாண்டு மீன்பிடித் தொழிலைச் செய்யும் படியும் சுரண்டி வாழ்பவரை ஒழிக்கும் படியும் அவர் கேட்டுக் கொண்டார்.

வட்டாரப் பரிசோதகர் திரு S. A. அருளானந்தம் பேசுகையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது திருப்திகரமாக இயங்கவில்லை என்றும் ஆனபடியால் கடற்றொழிலாளர் நற்பயனைப் பெறுவதற்கு அவை சீர்படுத்தப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார். அங்கத்தவர்களுக்கு கல்வியறிவு இல்லாதிருப்பது போலித்தலைவர் மோசடிகளைச் செய்ய வாய்ப்பாக இருக்கின்றது. இதைத் தவிர்ப்பதற்கு கருத்தரங்குகளையும் பயிற்சி வகுப்புகளையும் நடாத்தவேண்டும். இவற்ருல் அங்கத்தவர்கள் உபவிதிகளையும் தமது உரிமைகளையும் அறிந்து கொள்ள முடியும் என மேலும் பேசுகையில் அவர் கூறினர்.

# பாதுகாப்பு அளிக்கப்படும்

இவ்வாண்டு டிசம்பர் இறுதி வரை காசைக் கொண்டு செல்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படும் என இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார்.

சில கூட்டுறவு நிறுவனங்களுக்கு இத்தகைய பொலீஸ் பாதுகாப்பு மறுக்கப்பட்டுள்ளது என்ற புகாரைத் தொடர்ந்தே இவ்வறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. செயலாளர் அனுப்பியுள்ள சுற்று நிருபத்திலே முன்பொரு தடவை இத்தகைய பிரச்சினை எழுந்தபோது பொலீஸ்மா அதிபரை சம்மேளனத்தலைவர் சந்தித்ததாகவும் டிசம்பர் இறுதிவரை பொலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படும் என பொலீஸ் மாஅதிபர் வாக்களித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கங்களின் புகார்களை பொலீஸ் மாஅதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதாகவும் டிசம்பருக்குப் பின்பு சம்மேளனத் தலைவர் பொலீஸ் மாஅதிபரை மீண்டும் சந்தித்து பொலீஸ் பாதுகாப்பு ஒழுங்குகளை நீடிப்பதற்கு முயல்வார் என்றும் சுற்று நிருபம் மேலும் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமப்புறங்களில் ப. நோ. கூ. சங்கங்கள்

## இயங்கும் வட்டாரங்களில் ஐ. நா. சங்கங்கள் இயங்க வேண்டுமா ?

வி. இளங்கோ

உலகின் பொருளாதார சமூக, பண்பாட்டு நலனைப் பேணும் பயனுடைய இயக்கமாக கூட்டுறவு இன்று பல நாடுகளாலும் போற்றப்பட்டு வருகிறது. இது இங்கிலாந்தில் பண்டசாலை இயக்கமாக நுகர்ச்சியாளர்களாலும், ஜெர்மனியில் கடன் உதவும் இயக்கமாக விவசாயிகளாலும் ஆரம்பத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பெற்றது. பின்பு பல நாடுகள் பின்பற்றத் தொடங்கின. அவற்றில் ஈழமும் ஒன்றாகும். 1911 ம் ஆண்டு ஐக்கிய நாணய சங்கங்களின் உருவில் விதைக்கப்பட்ட கூட்டுறவு விதை இன்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பெரும் விருட்சமாக ப. நோ. கூ. சங்கங்கள் என்னும் பெயரில் விளங்குகின்றது. இன்றும் ஐ. நா: சங்கங்கள் ப. நோ. கூ. சங்கம் உள்ள சில இடங்களில் இயங்கி வருகின்றன. இந்நிலையில் ப. நோ. கூ. சங்கம் உள்ள கிராமப் புறங்களில் ஐ. நா. சங்கங்கள் இயங்க வேண்டுமா என்பது கூர்ந்து ஆராயவேண்டியுள்ளது.

ஐ. நா. சங்கங்கள் 1911ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டப்படி கடன் சுமையினால் பாதிக்கப்படும் பக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், பற்றாக்குறையாக உள்ள முதலைக் கூட்டுறவுச் சிக்கனச் சேமிப்பு மூலம் திரட்டவும் நிறுவப் பெற்றன. இது நடுத்தரவகுப்பாருக்கும் நில உடமையாளருக்கும் உதவியதேயன்றி சாதாரணமக்களுக்கு பயன் படவில்லை இவை நகரப்புறத்தில்தான் அமைக்கப்பட்டன. ப. நோ. கூ. சங்கங்கள் 1958ம் ஆண்டுச் சட்டப்படி சிக்கனச் சேமிப்பு, கடன் வசதி, விவசாய விருத்தி, தொழில் விருத்தி ஆகியவற்றில் தீவிர முயற்சி காட்டிவருகின்றது. ப. நோ. கூ. சங்கம், ஐ நா. சங்கம் இரண்டின் நோக்கமும் ஏறத்தாழ ஒன்றினுள் அடங்குவதால் இவை கிராமப்புறங்களில் இயங்குவதில் சாதக பாதகமான பல கருத்துக்கள் உள்ளன. முதலில் சாதகமான கருத்துக்களை ஆராய்வோம்.

ஐ. நா. சங்கங்களும் கிராமிய ப. நோ கூ. சங்கங்களும் இணைந்து இயங்கலாம் என்பதற்கு கூட்டுறவு இயக்கத்தின் முதுகெலும்பு ஐ நா. சங்கங்கள் என்றும் எனவே அவை மறையாது பாதுகாப்புடன் தொடர்ந்து இயங்கவேண்டும் என்பதை காரணமாகக் காட்டுகின்றனர். இரண்டாவதாக ப. நோ. கூ. சங்கங்களில் கடன் பெறுவதிலும் ஐ. நா. சங்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் கடன் பெறுவது சுருக்க மானதும் வசதியானதும் என்று வாதிக்கப்படுகிறது. கூட்டம் கூடுதல், விவாதித்தல், ஆராய்தல் என்பன குறித்த சிலரால், பொறுப்பு உடையவர்களால், குறித்த நேரத்தில் முடிவடைகின்றது. மேலும் இப்படியான ஐ. நா. சங்கங்களில் அங்கத்தவர் வர்த்தக தொழில் துறை பெரும் முதலீட்டில் உள்ளவர்கள். இவர்கள் தேவையும், பிரச்சினையும் தனிரகமானவை ப நோ. கூ. சங்கத்தில் பல்வேறு நோக்கம் தேவை உடையவர்கள் தமக்கு புலப்படாத, பொருந்தாத, அக்கறையற்ற விடயங்களிலும் சட்டப்படி உரிமை என்ற அளவில் ஈடுபடுத்தப் ட்டு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றனர். இதில் இருந்து தனியான ஐ. நா. சங்கம் கடன் எடுப்போரினைப் பாதுகாக்கின்றது.

மேலும், ஐ. நா. சங்கங்களில் வர்த்தகர்கள், சிறு முதலாளிகள் அங்கம் வகிக்கின்றனர். ப. நோ. கூ. சங்கமும் ஓரளவில் இதே தொழிலையே செய்கின்றது. வளர்ச்சியுடைய ப. நோ. கூ. சங்கங்கள் வர்த்தக முதலீட்டு கடன் வசதித்துறையில் முன்னணியில் உள்ளன. இத்தாபனங்கள் தமது அங்கத்தவர்கள் இத்தொழிலில் ஈடுபட தம்மிடம் உதவி கேட்பதை சாதகமான முறையில் பரிசீலிக்கமாட்டாது என்பது திண்ணம் என்றும் வாதிக்கப்படுகிறது. எனவே வர்த்தகர், முதலீட்டாளர்கள் தொகையான கடன் தேவையுடையோர் ஐ நா. சங்கங்கள் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றலாம் என்று கருதப்படுகின்றது. இதுவரை ஐ. நா. சங்கங்கள் ப.நோ.கூ. சங்கங்களுடன் இணைந்து இயங்குவதற்கு ஆதாரமான கருத்துக்கள் ஆராயப்பெற்றன. இனி பாதகமான கருத்துக்களை ஆராயலாம்.

ஐ நா. சங்கங்கள் ப நோ. கூ. சங்கத்துடன் இணைய வேண்டும் என்று கருதுவோர் மேற் சொன்ன சாதகமான கருத்துக்களை மறுப்பதன் மூலம் தமது இணைக்கும் கருத்தை வலியுறுத்துகின்றனர். ஐ. நா. சங்கங்களின் நோக்கம் விவசாயக் கடனையும் தொழிற் கடனையும் வழங்கி தன்னிறைவு அடைய ஏழை எளியவர்களுக்கு உதவுவதுடன் சேம வைப்புக்களுக்குரியவர்களுக்கு மட்டான வட்டியும் கிடைக்க வழிவகுக்கின்றது. இதனால் ஒரு சிலரன்றி சமூகத்தில் எல்லோருமே பயன் அடைகின்றனர், இங்கேதான் பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு, அமைதி அன்பைக் காணமுடியும். தனித்தனி தாபனங்கள் இருப்பது போட்டிக்கும், பூசலுக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வுக்கும் வழிவகுக்கும் என்று வாதிக்கப்படுகின்றது.

கடன் எடுத்த சங்கத்திலேயே விற்பனவு ஏற்பாடும் நடைபெறுமாயின் உறுப்பினர்க்குச் சந்தைப்படுத்தும் சிரமமும், கடன் கட்டவேண்டும் என்ற சிரமமும் இருக்காது. கடன் கொடுத்த சங்கத்திற்கும் அங்கத்தவனது கடனைப் பற்றி சந்தேகம் இடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது. பல சங்கங்களில் உள்ள ஒருவன் தனது பெறுமதியுள்ள பெரிய ஒரு பொறுப்பை எல்லாச் சங்கத்துக்கும் சாட்டுசல் செய்யமுடியாது. எனவே ஒரே சங்கத்தில் பல தேவைகளையும் நிறைவேற்ற அவனது ஒரு பொறுப்புப் போதுமானதாகும். இன்றும் பல சங்கங்களில் உள்ளவர் எந்த ஒரு சங்கத்துக்கும் தனது பூரண விசுவாசத்தைச் செலுத்த முடியாது. எனவே பொறுப்பற்ற நிலை காணப்படலாம். மேலும் ஒரு சங்கத்தில் பல்வேறு தரப்பட்ட பொருளாதார, இன, மதமுடையோர் இருக்கும் போது பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அறியவும், உணரவும், உதவவும் விட்டுக்கொடுக்கவும், சகித்துக் கொள்ளவும் தக்க சனநாயகப் பண்புகளையும் சமூக இன வர்ண ஒற்றுமையையும் காண முடியும்.

இவற்றைவிட நிருவாக, சட்டிட வசதிகளும் பொருளாதாரச் சிக்கனங்களும் உள. ஐ. நா. சங்கத்துக்கும், ப. நோ. கூ. சங்கத்திற்கும் இருகட்டிடங்கள் இரு நிலங்கள், இரு ஊழியர் சேவை என்பன தனித்துள்ள சங்கத்தை ப.நோ.கூ. சங்கங்கள் நிறைவேற்றுவதாலும், ஐ. நா. சங்கத்தில் கடன் தேவை ஒன்றுமட்டுமே தீர்க்கப்படக் கூடியது. ஏனையவற்றிற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தை நாடவேண்டியிருப்பதால் எல்லாவற்றிற்குமே ப. நோ. கூ. சங்கம் ஒன்றே போதுமானதாகும் என்றும் வாதிக்கப் பெறுகிறது.

இனி இணைக்கப்படவேண்டும் ஸ்போர் தரும் காரணங்களைக் கவனிக்கலாம். பொருளாதார விருத்திக்கு முதல் தேவை. அந்த முதலை சேமிப்பு மூலம் ப. நோ. கூ. சங்கங்கள் பெறமுடியும். இதில் உறுப்பினராய் இருப்போர் விவசாயி தொழிலாளி ஏழைகளாவர். இவர்கள் மூலம் பெரும் முதலை எதிர்பார்க்கமுடியாது. இவர்களின் தேவைக்கு விவசாய, நுகர்ச்சி தொழில் கடனை வழங்கியுள்ளது. எனவே கிராமியப் புறத்து பணமுள்ள முதலீட்டாளர் வர்த்தகர்கள், நில உடமையாளர்களை சேர்த்து அவர்களின் வைப்புகள், சேமங்கள் மீது மற்றவர்களுக்கு கடன் வழங்கலாம். இவர்கள் தனியே ஐ நா. சங்கங்களை அமைத்தால் முதல் திரட்டப்பட்டு பொருளாதாரத்திலும் வாணிபத்திலும் ஈடுபட்டு ஒரு சில நன்மையடைவர். இது கூட்டுறவு நோக்கத்துக்குப் பாதகமானது. இரு சங்கங்களை நிருவகிக்க இரு நிருவாகத்தர்கள் தேவைப்படுகின்றனர். இவர்கள் ஒன்றாக இணைக்கப்படும் போது இவைமாட்டு உள்ள திறமையும் இணைக்கப்பட்டுச் செயற்படுவதுடன் திறமான நிருவாகப் பற்றாக்குறையும் நீங்குகிறது. நடைமுறையில் கிராமிய ப. நோ. கூ. ச. முறை இன்றும் வளர்ச்சியுறாமைக்கு நல்ல திறமையான நிருவாகப் பற்றாக்குறையே முக்கிய காரணமாகும். பல சங்கங்கள் சிறு தொகைமூலம் கடன் பெறும் போது கடன் செலவு கூடுகிறது. இவை இணைந்து பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை கடன் பெறும்போது சங்கத்தின் கடன் செலவு குறைவதுடன் கொடுக்கும் தாபனத்துக்கும் கடன்பெறும் தாபனத்தைப்பற்றிய கடன் இறுக்கும் தன்மையின் நம்பிக்கை பலமடைகின்றது. இத்துணை பல்வேறு காரணங்கள் கிராமியச் சூழ்நிலையில் ஐ நா. சங்கங்கள் தனித்து இயங்குவதற்கு மாறாக இணைக்கப்பட்டு ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் வரவேண்டியதன் பயனை வலியுறுத்துகின்றன.

மேலும் ஒரு ப. நோ. கூ. சங்கம் மக்களிடத்தில் சிக்கன முறையை பரப்பி சேமிப்பை வளர்ப்பதன்மூலம் உறுப்பினர் முதலுடன் வருமானம் பெற காரணமாகிறது. இம்முதல் சிறுதுளி பெருவெள்ளம் போல் சங்கமூலம் திரட்டப்பட்டு நுகர்ச்சி வியாபாரம், விவசாய,உணவு விருத்தி சிறுகைத்தொழில் விருத்தி தாய்கறி பயிரிடல் இன்னோரன்னவற்றிற்கு முதலில்லாத கடன் விரும்பும் அங்கத்தவருக்கு கடன் வழங்குகின்றது. இது தனிமனிதனது பொருளாதார விருத்தியையும் அந்தஸ்தையும் உயர்த்துவதுடன் சங்கவருவாயையும் கூட்டுகிறது. உற்பத்திகளை கொள்வனவுசெய்து விற்பனவு செய்து கொடுப்பதன்மூலம் கழிவுகளை சங்கம் பெற்று ஆதாயம் அடைவதுடன் உற்பத்தியாளர் கள்ளச்சந்தையின் இரும்புப்பிடியினின்றும் தப்புவதுடன் கடனையும் நாணயத்துடன் கட்டிவிடுகின்றனர். இதனால் மேலும் கடன்களைப்பெற்று பொருளாதாரவிருத்தி செய்ய முடிகின்றது. சங்கமும் ஆதாயத்தை பொருளாதார விருத்திக்காக முதலீட்டில் இட்டு ஆதாயம் பெறுகிறது. வருட ஆதாயம் அங்கத்தினருக்கும் முறைப்படி சேருகின்றது. எனவே சங்கமும் உறுப்பினரும் ஒருசேர இலாபம் அடைகின்றனர்.

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

கோண்டாவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 19-9-69 பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இரண்டாவது பரிசுபெற்ற கவிதை*

# கும்மி

—அ. மகாலிங்கம்

கும்மியடி பெண்ணே கும்மியடி, வாழ்க
கூட்டுற வென்று நீ கும்மியடி,
நம்மைப் பிடித்த துயரங்கள் போயின
நாட்டில் மலர்ந்திட்ட கூட்டுறவால் (கும்மியடி)

ஏழைக் கமக்காரன் இன்னல்கள் போயின
இன்றவன் வாழ்விலே பஞ்சமில்லை
வாழப் பழகினன், வல்லமை பெற் றிட்டான்
வந்த திங்நன்னிலை கூட்டுறவால் (கும்மியடி)

கொள்ளையடிக்கும் முதலாளி இன்றெங்கே?
கூட்டுறவின் சக்தி பார்த்திடடி
மெள்ளச் சுரண்டும் தரகனும் போய்விட்டான்
மேன்மை யைத்தந்தது கூட்டுறவே (கும்மியடி)

நெல்லு விதைத்திடப் பெற்றிடுவான் கடன்
நித்தம் பெரும் வட்டி ஏறுமடி
சொல்ல முடியாத துன்பமடி அது
சொப்பனத்தில் கூட இன்றில்லையே (கும்மியடி)

ஏழை பணக்காரன் பேதம் இல்லை இங்கே
எந்தப் பிரிவென்ற பேச்சும் இல்லை
வாழ வழி காட்டும் கூட்டுறவின் முன்னே
வையத்துள்ளோ ரெல்லாம் சோதரரே (கும்மியடி)

கூட்டுறவால் உரம் பெற்ற தொழி லென்று
கூற முடியுமோ ஒன்றை மட்டும்
நாட்டிலுள்ள தொழில் அத்தனையும் பெண்ணே
நன்மை பெறுவது கூட்டுறவால் (கும்மியடி)

நாட்டுயர்வு பெற வேறு வழியில்லை
நாம் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கடி
கூட்டுற வென்றிடும் வாழ்க்கை முறையொன்றே
கொண்டு செல்லும் எம்மை நன் னெறிக்கு (கும்மியடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கிராமச் சந்தை

பாஸ்கரன் தெய்வநாயகம்

**நான்** ஐந்தாம் வகுப்புப் படிக்கிறேன். எங்களுடைய வகுப்பு மாணவரெல்லோரும் ஒரு நாள் எங்கள் ஆசிரியருடன் எங்கள் ஊரிலிருக்கும் சந்தையைப் பார்ப்பதற்காக நடந்து சென்றோம்.

எமது சந்தை அளவான சிறிய கட்டிடம். அந்தக் கட்டிடத்தை பல சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலும் வேறு வேறு விதமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பிரிவில் மரக்கறி இலைவகைகளும், மற்றப்பிரிவில் கிழங்கு வகைகளும், பழவகைகளும் இன்னொரு பிரிவில் மீன் வகைகளும் வைத்திருந்தார்கள். சிலர் அக்கட்டிடத்துக்குள் இடம் போதாமையால் கட்டிடத்துக்கு வெளியேயும் கிடுகுகளாலும், சிறு சிறு பந்தர் போன்று இடங்களையமைத்திருந்தார்கள். சிலர் சந்தை வளவின் ஓரத்திலிருக்கும் பெரிய மரங்களுக்குக் கீழேயும் தங்கள் பொருட்களை வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள். இப்படி சந்தை வளவின் பல பக்கங்களிலிருந்தும் சாமான்கள் விற்பனையாகிக் கொண்டிருந்தன.

நாங்கள் சந்தையினுள் போனதும் முதன் முதலாகச் பழவகைகள் விற்குமிடத்துக்குப் போனோம். அங்கு ஒரு வியாபாரி மட்டுமிருந்து வாழைப்பழமும், பாலைப்பழமும் விற்றுக் கொண்டிருந்தான். அதற்குப் பக்கத்தில் கிடுகுகளால் அடைத்த இடத்தில் வாழைப்பழக்கடை இருந்தது. அங்கு பல வியாபாரிகள் சுறுசுறுப்பாக தமது விற்பனையில் ஈடுபட்டிருந்தனர். எமது ஆசிரியர் வாழைப்பழம் விற்றுக் கொண்டிருந்த வயது போன ஒரு மாகிடம் ஒரு குலை வாழைப்பழத்தை வாங்கிக் கோயிலுக்குக் கொடுக்க எடுத்துக் கொண்டார். நாங்கள் பாலைப்பழம் வாங்கினோம்.

நாங்கள் அதன்பிறகு மரக்கறி விற்குமிடத்திற்குப் போனோம். அங்கு சுரைக்காய், கத்தரிக்காய், வெண்டிக்காய், பயிற்றங்காய் முதலியன அழகாக வைக்கப்பட்டிருந்தன. அன்று வெள்ளிக்கிழமையாதலால் அங்கு மரக்கறிவகைகள் ஏராளமாக விற்பனையாயின. கிழங்கு வகைகளில் மரவள்ளி, உருளைக்கிழங்கு, இராசவள்ளி, வற்றாளை ஆகியனவும் அங்கு காணப்பட்டன. ஒவ்வொரு வியாபாரியும் தங்களுடைய பொருள்களை விற்பதற்கு மற்ற வியாபாரிகளோடு போட்டி போட்டுக் கொண்டு தங்களுடைய பொருள்களின் சிறப்புக்களை எடுத்துப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். இதனால் அவர்களிடையே சண்டையும் வரப்பார்

த்தது. மேலும், நாங்கள் அவ்விடத்தில் நிற்காமல் மீன் விற்குமிடத்தைப் பார்வையிடச் சென்றோம். பாரை, சுறு, அறுக்குளா, சூடை போன்ற மீன்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. பின்பு நாங்கள் வெற்றிலை, பாக்கு, தேங்காய், கயிறு, துமபுக்கட்டு, விளக்குமாறு முதலிய பொருள்கள் விற்குமிடத்திற்குப் போனோம். அங்கு எங்கள் ஆசிரியர் அவருக்காக வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டார்.

பின்பு நாங்கள் ஒரு குளிர்பானம் விற்கும் கடைக்குப் போய் சர்பத் அருந்தினோம். அப்போது ஒருவர் வந்து அங்கு கடை வைத்திருந்த வியாபாரிகள் ஒவ்வொருவரிடமும் காசு வாங்கிக் கொண்டிருந்தார். நாங்கள் அதைப் பற்றி விளங்காமல் ஆசிரியரிடம் அதைப்பற்றிக் கேட்டோம். அது கிராமச் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய காசு என்றும், பொருள்களை விற்போரிடம் அறவிடப்படும் வரிப்பணம் என்றும் அவர் விளக்கம் தந்தார்.

நாங்கள் தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொண்ட திருப்தியாலும், சந்தையில் நடக்கும் புதினங்களைப் பார்த்த சந்தோசத்தினாலும் எங்கள் ஆசிரியருக்கு மிகவும் நன்றி கூறி பாடசாலை சென்றடைந்தோம்.

# மூதூரில் கூட்டுறவுத்தினவிழா

கூட்டுறவுத்தினவிழா திருக்கோணமலை மாவட்ட கூட்டுறவுச் சமாசத்தினால் மூதூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவையொட்டி விளையாட்டு, கலைத்துறைகளில் போட்டிகள் நடாத்தப்பட்டன. மூதூர் பட்டினசபைத்தலைவர் திரு. N. M. அலியார் தம்பி தேசீயக் கொடியையும், திருக்கோணமலை மாவட்ட கூட்டுறவுச் சமாசத்தலைவர் முகாந்திரம் C. முத்துக்குமாரு கூட்டுறவுக் கொடியையும் ஏற்றிவைத்தார்கள்.

பகிரங்கக்கூட்டம் அர்ச். அந்தோனியார் பாடசாலையில் கல்வி அதிபர் திரு. A. சந்திரசேகரம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முகாந்திரம் C. முத்துக்குமாரு, திருவாளர்கள் E M. கனகசபை, M. K. செல்வராசா, K. இரத்தினபாலா நாடாளுமன்ற உறுப்பினர் ஜனுப் M. E. H முகமட்அலி, தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு. D. மாமடுவ, காரியாதிகாரி திரு. S. சாம்பசிவஐயர் ஆகியோரும் பேசினர். நிருவாகக்காரியதரிசி திரு. க. ஜெயரத்தினம் நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ. மா. க. தொ. கூ. சங்கங்களின் சமாசம் வலை விநியோகம் செய்யத்தான் வேண்டுமா?

—ச. ஸ்ரனிஸ்லாஸ்

இன்று பலரிடையே வ. மா. க. கூ. சமாசம் வலை விநியோகத்தைச் செய்யத்தான் வேண்டுமா? கூட்டுத்தாபனக்கிளைகளும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களும் இவ்விநியோகத்தைச் செய்யக்கூடாதா என்ற அபிப்பிராயம் நிலவி வருவதாகத் தெரிகிறது. இந்நிலையில் வலை விநியோகக் கடற்றொழிலாளர் சமாசத்தின் கையில் எப்படி வந்தது? சமாசம் பொறுப்பேற்கமுன்னர் வலை விநியோகம் எப்படி நடந்தது என்பனபற்றிய வரலாற்றையும் அறிந்திருப்பது நன்றாகும். எனவே, இவ் வரலாற்றைச் சுருக்கமாக இங்கு தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வ. மா. க. கூ. ச. சமாசம் 1959-ல்பதியப்பட்டது. அப்பொழுது இலங்கையில் இருந்த ஒரேயொரு கூட்டுறவுச் சமாசம், அகில இலங்கை மீன் விற்பனைக் கூட்டுறவுச் சமாசமே. நைலோன் வலைகள் பாவனைக்கு வந்ததும் இலங்கை மீன்பிடியாளருக்கு வேண்டிய மீன்பிடி உபகரணங்களைக் கொழும்பு மீன் விற்பனைக் கூட்டுறவுச் சமாசமும் தனிப்பட்ட வியாபாரிகளுமே இறக்குமதி செய்து விநியோகித்து வந்தார்கள். இந்நிலையில் எங்கள் பகுதியிலிருந்து பெருந்தொகையான கடற்றொழிலாளர்கள் கொழும்பு சென்று தமக்கு வேண்டிய வலைகளையும், நூல்களையும் வாங்கி வந்தார்கள். ஆனால் யாழ்ப்பாணப்பகுதியில் சில இறக்குமதியாளர்களும் இருந்தமை தொழிலாளர்களின் பேரதிஷ்டமே. எனினும், இலாபத்தையே நோக்கமாகக்கொண்டு வியாபாரம் செய்த தனிப்பட்டவர்களிடம் விலை அதிகமாக இருந்தமையால் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் வாங்குவதற்காகக் கொழும்பு சென்றார்கள்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இக்கால எல்லையுள் கொழும்பு மீன் விற்பனைச் சமாசத்தின் வலை விநியோகத்தர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாக நியமனம் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

கடற்றெழிலாளர் சமாசம் ஒன்று இருந்தும் கொழும்பு மீன்பிடிச் சமாசம் ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சமாசத்தை ஏஜெண்டாக நியமித்தமை நூதனமானதே. இருப்பினும் காரணத்தை ஆராய்ந்து கொண்டு போகும்பொழுது கடற்றெழிலாளர் சமாசம் இக்கால எல்லையில் நல்ல முறையில் செயலாற்றவில்லை என்றும், அது மீன் விற்பனையில் கவனம் செலுத்தியதேயன்றி மீன்பிடி உபகரணங்களைத் தொழிலாளருக்குக் கொடுக்கவேண்டுமே என்று எண்ணவில்லை என்பதும் தெரியவருகிறது.

1964ம் ஆண்டில் ஆனி மாதம் விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாச மண்டபத்தில், முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையில் எமது சமாசம் ஒரு மகாநாட்டைக் கூடியது. இம்மகாநாட்டில் இப்போது சிரேஷ்ட கடற்றெழில் அதிபராகக் கடமையாற்றும் திரு. V. L. C. பீற்றேர்ஸ் அவர்கள் உத்தியோகபூர்வமாக முதன்முதல் பங்குபற்றினர். அம்மகாநாட்டில் ஆலோசனைக்கு முக்கியமாக எடுத்துக்கொள்ளப்பட்ட விடயம் வலை விநியோகமாகும்.

கடற்றெழிலாளரின் சமாசமே இத்தொழிலைச் செய்யப் பொருத்தமான தாபனம் என்பது அழுத்தந் திருத்தமாக இம்மகாநாட்டில் எடுத்துக் காட்டப்பட்டது. அந்தந்தக் காலத்துக்குத் தேவையான வலைகள் நூல்கள் பற்றிய அறிவு க. தொ. சமாசத்துக்கே உண்டு. அத்துடன் அங்கத்தவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை நீதியான விலையில் கொடுத்துதவவேண்டியது சமாசத்தின் பொறுப்பென்பதும் எடுத்துக்காட்டப்பட்டது. இம்மகாநாட்டைத் தொடர்ந்து கொழும்பு மீன் விற்பனைச் சமாசத்திற்கு வலை விநியோக ஏஜென்சி பெறுவது இலகுவான காரியமாக அமையவில்லை. யாழ்ப்பாணத்தில் ஒரு புலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஏஜென்சி வழங்கியபடியால் இச்சமாசத்துக்கு ஏஜென்சி வழங்கமுடியாது எனக் கொழும்புச் சமாசம் மறுத்துவிட்டது. காலஞ்சென்ற முன்னாள் யாழ்-கிழக்கு உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கத்தின் பேருதவியால் யாழ் பலநோக்குக் கூ. ச. சமாசத்தின் ஏஜென்சியை ரத்துச்செய்து அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏஜென்சியை கடற்றொழிலாளர் சமாசத்துக்குக்கொடுக்க வேண்டுமென விண்ணப்பித்திருந்தோம். யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சமாசமும் பெருந்தன்மையுடன் எமக்காகத் தமது ஏஜென்சியை விட்டுத்தது.

வலை விநியோகத்தைச் செய்வதற்குத் தகுந்த ஊழியர் இல்லையே, தகுந்த கட்டிடம் இல்லையே என்ற பிரச்சினை எழுந்தது. இதைக் காரணமாகக்கொண்டு கொழும்புச் சமாசம் ஏஜென்சி அளிக்கப் பின்வாங்கியது. எமது சமாசத்துக்கு நிரந்தர வருமானம் இல்லை. எனவே, தகுந்த சம்பளம் கொடுத்து ஒருவரை வைப்பதோ நல்ல கட்டிடமொன்றை வாடகைக்குப் பெறுவதோ முடியாதகாரியமாய் இருந்தது. இந்நிலையில் திரு. சிறீதரன் குறைந்தவேதனத்தில் சமாச முகாமையாளராகக் கடமையாற்ற முன்வந்தார். துறைமுகத் தொழிலாளர் சமாசம் தனது கட்டிடத்தில் அரைவாசியை எமக்குத் தந்துதவ முன்வந்தது. இப்பேருதவிக்குத் துறைமுகச் தொழிலாளர் சமாசத் தலைவர் திரு. சிக்மறிங்கம் அவர்களுக்கும், சிறீதரன் அவர்களுக்கும் சமாசம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

உடனடியாகச் சிறீதரன் வலை விற்பனையில் பயிற்சி பெறக் கொழும்புக்கு அனுப்பப்பட்டார். புதிய கட்டிடத்துக்குச் சமாசக் கந்தோர மாற்றப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் கொழும்புச் சமாசத்தை நாடினோம். ஏஜென்சியைக் கேட்டோம். ஆனால், உங்கள் பணநிலை திருப்தியாக இல்லை என்பதைச் சாட்டி ஏஜென்சி தர மறுத்தார்கள். யாழ் மாவட்டக் கூட்டுறவு வங்கியை நாடினோம். எமக்கு வேண்டிய நிதியைத் தந்துதவ வங்கி முன்வந்தது.

இவ்வாறு பல முட்டுக்கட்டைகளைத் தாண்டியபின் சிரேஷ்ட கடற்றொழில் அதிபரின் பலவந்தத்தாலும், அமரர் மதிபாலசிங்கத்தின் ஆக்கினையாலும், சமாசத்தின் தளரா முயற்சியாலும் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் எமது சமாசம் கொழும்பு மீன் விற்பனைச் சமாசத்திடமிருந்து வலைவிநியோக ஏஜென்சியைப் பெற்றது.

ஒரு கூட்டுறவுச் சமாசத்திலிருந்து இன்னோர் கூட்டுறவுச் சமாசம், அதுவும் கடற்றொழிலாளர் சமாசம் ஏஜென்சி பெற இத்துணைப் பாடுகள் படவேண்டுமா என்பது சிந்தனைக்குரிய தொன்றாகும். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை :-

(முற்றொடர்)

# சாவின் நினைவு இருக்கட்டும்

—ஆடலிறை

இவர் மேல் பலவந்தமாக இச்சமூகத்தால் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் 'கௌரவமான மனிதர்' என்ற கௌரவப் பட்டத்தை இவர் மனப்பூர்வமாக ஏற்பவரா?-ஏற்றுக்கொண்டு விட்டாரா? இவருக்கு அதைப்பற்றிய பிரக்ஞை பூர்வமான திருப்தியா?

அப்படியென்றால் இச்சமூகத்திற்கு—மூடி மறைத்துக் கௌரவ மனிதர்களாக வாழும் இச்சமூகத்திற்கு-டாக்டர் மகேஸ்வரன் பின்னணியிலுள்ள சோகக்கதையின் வரலாறு ஒன்றும் புதினமல்ல என்ற சகஜ நோக்கின் தாற்பரியமா?

இல்லையேல் டாக்டர் மகேஸ்வரன் பற்றற்ற துறவியா?

ஆனல் அதற்குரிய அருட்குறிகளோ, வேஷங்களோ அற்ற ஒரு துறவு நிலையா?

டாக்டர் மகேஸ்வரன் பகவத் கீதைக்குள் மூழ்கிக் கிடக்கின்றார். இந்தக் கௌரவமான மனிதர் தனது மன அமைதிக்காக அதைப் படிக்கின்றார். கடந்தபல வருஷங்களாக அதையே தான் அவர் படித்து வருகின்றார். புத்தகம் முழுவதும்-ஒரு வரி கூடத்தப்பாமல்-அவருக்கு நன்கு பாடமாகி விட்டது. ஆனாலும் இப்போதுதான் முதல் தடவையாகப் படிப்பவர் போல் அவ்வளவு ஆர்த்மார்த்தமாக அதற்குள் புதைந்து கிடக்கின்றார்.

"கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்ய வேண்டிய தொழிலை எவன் செய்கின்றானே அவனே துறவி அவனே யோகி"

'மகேஸ்வரனாகிய நான் துறவியா?' அவர் தன்னைத் தானே கேட்டுக்கொண்டார். "புத்தியில் தெளிவு பெற்றவன் விருப்பு வெறுப்பற்றவனாகிவிடுகிறான்."

'நான் விருப்பு வெறுப்பற்றவனா?'

டாக்டர் மகேஸ்வரன் தனக்குள் தன்னைத்தானே கேட்டுக்கொண்டார்.

"புத்தியில் சார்பு எய்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் கவலை நினைப்புக்களுக்கும், அவற்றுக்கனுசரணையான பாவ நினைப்புக்களுக்கும் இடந்தரமாட்டான்”

‘பகவான் போதித்த இத்தனை தர்ம நியதிகளையும் நான் கடைப்பிடித்து நடக்கின்றேனு?’

இவர் தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

விழிநீர் விரித்திருந்த புத்தகத்தில் விழுந்து சிதற. இவர் விரல்கள் பக்கங்களைப் புரட்டுகின்றன. இரண்டாம் அத்தியாயத்தின் சாங்கிய யோகப் பகுதியின் பதினோராம் சுலோகத்தில் அவர் பார்வை நிலைக்கின்றது.

‘துயரப் படத்தகாதார் பொருட்டுத் துயர்ப்படுகின்ருய் ஞானவுரைகளுமுரைக்கின்ருய். இறந்தார்க்கேனும் இருந்தாற்கேனும் துயர் கொள்ளார் அறிஞர்’’

டாக்டர் மகேஸ்வரன் தனது கைகளிலுள்ள பகவத் கீதையை மூடி மேசை மீது வைத்தார். கைகளைக் கோர்த்து நாடிக்கு உதைமானங் கொடுத்து கண்களை மூடிக் கொண்டார்.

மௌனத்தின் மோனத் தவத்தில் டாக்டர் மகேஸ்வரன் மூழ்கிப் போய் விட்டாரா?

அலைகளின் சென்னியில் பூவிரிசு நுரைகள் கொப்பளித்துச் சீறிப்பாய அகண்டமான வாய்ப் பிளவுகளைத் திறந்து பெருந் திமிங்கலங்களாக ஓடிவரும் கடல் மடிப்புக்கள் இடி முழக்க ஓதையுடன் கரையில் மோதி மோதி மடிய-புலனடக்க விஷயங்களில் நடைமுறையைக் கடைப்பிடித்து தேர்ச்சி பெருதவராயினும், மனமொடுக்க மென்பதைத் தனதடக்கமாக நிறுத்திய டாக்டர் மகேஸ்வரனிடத்தில் மற்றெல்லாம் சிறுகத் தேய்ந்து ஒடுங்கவிட, நிலைப் படுத்தப்பட்ட மனத்தினராய் ஒன்பது வருஷங்களுக்கு முந்திய சம்பவங்களை அசை போடுகின்ருரா?

மத்திய வர்க்கத்தில் பிறந்த மகேஸ்வரன் சமூகத்தின் உயர்ந்த மட்டத்து மனிதனை வேண்டுமென்று நினைத்ததில் தவறேதும் இருக்க முடியுமா?

கெட்டிக்காரன், சுட்டித்தனமான படிப்பாளி என்பதால் மட்டும் எல்லாம் ஒரு சேர ஒருவனுக்கு வந்து விட முடியுமா? ‘கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குத்தான்’ என்பார்கள். மகேஸ்வரன் ‘மெடிக்கல்’ கல்லூரியில் இருக்கும் போதே பொருளாதார விஷயம் அவர் படிப்பிற்குத் துணைபுரிய மறுத்தது. சாதாரண சுருட்டுத் தொழிலாளியான தனது தந்தை படும் பாட்டை நினைத்து வருந்திய மகேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன் அந்த முடிவைத் தந்தையிடம் சொல்லத் தயங்கியவாறு வெளியிட்டார்.

அதற்கு இவருடைய தந்தை சொல்கிறார்:-

“தம்பி, உயரப் பறக்க நினைப்பது தவறல்ல. ஆனால் ஆரும் கட்டி விடும் செட்டையை நம்பிப் பறப்பது தான் அபாயம். அதிலும் தன் முயற்சியால் உயரத்தில் ஏறியவன் தற்செயலாகத் தவறி விழுந்தாலும், மறுபடியும் அவனால் அந்த இலக்கை அடைய முடியும். ஆனால் மேலே உயரத்தில் தூக்கி இருத்தப் படுபவன் மாத்திரம் கீழே விழுந்து விட்டால் நிச்சயமாக அவன் திரும்ப ஏறவே மாட்டான்..

அதிலும் பரம்பரைப் பணக்காரனை நம்பினாலும், பாதியில் திடுதிப்பென்று பணக்காரர்கள் ஆகியவர்களைப் போல் படுஅயோக்கியர்கள் யாருமே இருக்க முடியாது. பணம் வந்து விட்டால் பத்தும் மறைந்து போய்விடும். இந்தக் காலத்திலே, குலம் கோத்திரம் பாராமல், அவர்களுடைய வரலாறு தெரியாமல் வெறும் பணத்திற்காக மட்டும் இந்தக் காரியத்தைச் செய்வது எனக்கென்னவோ நல்லதாகப் படவில்லை.........

வாழ்க்கையென்பது வெறும் குழந்தைப்பிள்ளை விளையாட்டுத்தனமான மண் சோறுகறி விளையாட்டல்ல. கலியாணமென்பது கண்ணன் பள்ளி கொள்ளும் ஆலமரம் போன்றது. அதனால்தான் “கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர்” என்று எங்கள் முன்னோர் சொல்லி வைத்திருக்க வேண்டும். ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நீடூழி வாழ்க” என்ற வாழ்த்து எதைக் குறிக்கிறதென்று நினைக்கிறாய்?...... எதுவோ, எனக்குத் தெரிந்ததைச் சொல்லிவிட்டேன் தம்பி பின்னால் என்னைமாத்திரம் நொந்துகொள்ளாதே” என்றெல்லாம நீண்ட அறிவுரைகளைச் சொல்லி நிறுத்தினார் மகேஸ்வரனின் தந்தை.

“காலந்தெரியாத பேச்சு; கனகாலத்திற்கு முந்திப் பேசியிருக்க வேண்டிய பத்தாம் பசளிப்பேச்சு” இது மகேஸ்வரனின் நினைப்பு. ஆனால் தந்தையிடம் இப்படிப் பேச முடியுமா? ஒரு விதமான பவ்வியத்துடன், காலமாற்றங்களையும், கடைசியில் மிஞ்சப்போகும் உலோகாயுத விஷயங்களையும் பற்றி தனது நவீன கல்வி முறையின் நாவன்மையால் தந்தையை வசப்படுத்தி எடுத்துக் கொள்கிறார் மகேஸ்வரன். வாழ்க்கையின் முன்னேற்ற மொன்றையே

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.................



குறிக்கோளாக நிறுத்தி எப்படியாவது அடித்துப் புரண்டு எழுந்து சமூகத்தின் முன்னணியில் வந்து பெரிய மனிதராகிவிடவேண்டுமென்ற தார்ப்பரியத்தில், சீதனப் பணத்தின் மூலம் வெளிநாடுவரை சென்று பலவித பட்டங்களைப் பெற்ற பின்பு மிக நேர்த்தியான நிபுணராகவே நாடு திரும்புகிறார்.

அரசாங்க ஆஸ்பத்திரியில் டாக்டர் மகேஸ்வரன் சேர்ஜனாக நியமிக்கப்பட்டு விட்டார். ஆயிரக் கணக்கில் சம்பளம். அழகான மனைவி, பங்களா, காரும் கார்ச்சாரதியும், பெருந்தட்டில் பிரபல்யமான புகழும் பெயரும் இவர் அதிஷ்டத்தை புகழாதவர்களே கிடையாது.

கல்வித்துறையில் டாக்டர் மகேஸ்வரன் அடைந்த மகத்தான முன்னேற்றம் அபாரமானதுதான். இவரைப் போன்ற நிபுணர்கள் இங்கு வெகு சிலரேதான். ஆனல் கல்வியும் தொழிலும் தான் ஒரு மனிதனுடைய முழு முன்னேற்றமும் என்று சொல்ல முடியுமா?

எவளுடைய பணத்தின் மூலம் மகேஸ்வரன் இத்தனை முன்னேற்றங்களையும் பெற்றுச் சமூகத்தின் முன்னணியில் நிற்கவேண்டுமென்று கங்கணங்கட்டி முனைந்து நின்று பெற்றரோ — அதே அவளால் இவர் சமூகத்தின் பின்னணியில்கூட நிற்க முடியாதவாறு அவமானப் படுவதாக இருந்தால்......

ஐந்து விநாடிகள் கூட சௌசன்னிய உறவில் நிலைத்து நிற்க முடியாத பல பயித்தியக்காரர்களால் ஐம்பது வருஷங்கள் கூட நிலை பெற்று விடுகிற தென்றல் மேல் தட்டு வர்க்கத்தில் இவை சர்வ சாதாரண சகஜம்தான் போலும்!

மேல் தட்டு வர்க்கத்தில் சகஜமாகிவிட்ட இந்த அருவருக்கத்தக்க செயல்களிருந்து டாக்டர் மகேஸ்வரன் விதிவிலக்கானவரா?

ஒருநாள் டாக்டர் மகேஸ்வரனை இவருடைய கார் வந்து அழைத்துப் போவதற்கு முன்னடியே வீடு வந்து சேருகின்றார்.

கார் வீட்டின் போட்டிகோ வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

'ட்ரைவர் எங்கே?'

டாக்டர் மகேஸ்வரன் வீட்டிலுள்ளே செல்கின்றார்.

படுக்கை அறை இவர் கண்களில் படுகின்றது. அதை அண்மித்தபோது......?

மகேஸ்வரனின் குருதி உறைந்து இறுகிவிட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரவளைக்குள் ஒலி அடைபட்டுவிட, நாக்குப் புரளாமல் அண்ணத்தில் ஒட்டிவிட, நிலை குத்தி நின்ற விழிகளுடன் அசைவற்று நின்ற நிலை, நின்றபடியே செத்து விட்டாரா?

திடீரென்று நினைவு பெற்று ஏதோ நினைத்துக் கொண்டவராக வந்த சுவடே தெரியாமல் விறுவிறென்று வெளியே சென்று விட்டார் மகேஸ்வரன்.

இவர் அவள் முகத்தைப் பார்த்தே பல வருஷங்களாகி விட்டன. அதாவது இவரைப் பொறுத்தவரையில் அன்றே செத்து மடிந்து இவரது நினைவையும் விட்டகன்று விட்டதான நிலை.

டாக்டர் மகேஸ்வரன் எவ்வளவு கௌரவமான மனிதர். இவரை இச்சமூகம் எவ்வளவு தூரத்திற்கு மதிப்பு வைத்துப் போற்றுகின்றது.

பருவமாற்றங்களின் பலவித தாக்கங்களால் இழுத்தலைக்கழிக்கப்படும் அக்கடல் டாக்டர் மகேஸ்வரனுக்கு ஈடிணையாக இருக்க முடியுமா?

ஈமச்சடங்குகள் யாவும் முடிந்து விட்டன. எல்லோரும் மெல்ல மெல்லக் கலைந்து போய்விட்டார்கள். அழுது கொண்டு நிற்கும் ட்றைவர் சிங்காரம் இவர்கண்ணில்படுகின்றான்.

இவர் அவனை அழைத்தார்.

"சிங்காரம், இன்றுடன் இங்கு உன் வேலை முடிந்து விட்டது. நீ உடனே இங்கிருந்து போய் விடு."

ஆம்! இவர் கடலினும் பெரியவரே!

உள்ளும், புறமும் உலகத்தில் என்னென்னவோ— எவ்வளவோ நடக்கின்றன. பெய்யாப் பெருமழை பெய்து விட்டால் குளங்குட்டைகள் தான் உடைப்பெடுத்து ஊரறிரச் செய்து விடுகின்றன. ஆனல் கடல் —அது ஊழிக் கூத்தாடுகின்றதே தவிர உடைப்பதில்லையே!

ஆம்! கீதைநீழலில் வாழும் டாக்டர் மகேஸ்வரன் அக் கடலினும் பெரியவரே!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் விளையாட்டின் புனிதப்பண்பாட்டு நோக்கங்களும் XIX ஒலிம்பிக் போட்டியும்

—ம. அ. பிரகாசராசா

## தெரிவு முறை

இன்று உலகின் பெரும் விளையாட்டு நிகழ்ச்சியாக விளங்கும் ஒலிம்பிக் விளையாட்டு நடைபெறும் நாட்டிற்கும் அதில் பங்குபற்றும் ஏனைய நாடுகளுக்கும் கோடிக்கணக்கான பவுண்கள் செலவாகின்றன. ஒலிம்பிக் விளையாட்டின் உயர் அதிகாரம் சர்வதேச ஒலிம்பிக் நிருவாக குழுவுக்கே உரியது. இக்குழு 7க்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இது சுயமாக செயற்படும் குழுவாகும். இக்குழுவின் அங்கத்தவர்கள் தங்கள், தங்கள் நாட்டின் பிரதிநிதிகளாக விளங்காமல் தங்கள் நாடுகளில் உள்ள தேசீய ஒலிம்பிக் நிருவாகக் குழுக்களின் பிரதிநிதிகளாகவே விளங்குவார்கள். ஒலிம்பிக் விளையாட்டு எந்த நாட்டில் நடைபெற வேண்டுமென்றும் ஒலிம்பிக் இயக்கத்தின் சட்டமும் நோக்கங்களும் ஒலிம்பிக் விளையாட்டை ஒழுங்கு படுத்தும் குழுவினுலும் தேசீய ஒலிம்பிக் சமுக்களினுலும் கடைப்பிடிக்கப் படுகிறதா என்பதைச் சர்வதேச ஒலிம்பிக குழுவே தீர்மானிக்கிறது.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் நாடு தேசீய ஒலிம்பிக் குழுவை உடையதாகவும், அதன் விதிகள் சர்வதேச ஒலிம்பிக் குழுவினுல் அங்கீகரிக்கப் பட்டுமிருக்கவேண்டும். இப்போது ஏறக்குறைய 132 தேசீய ஒலிம்பிக் குழுக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நாடும் ஒலிம்பிக் விளையாட்டு வீரர் கோஷ்டியை தெரிவு செய்யும் பொழுது அவ்விளையாட்டு வீரர்கள் விளையாட்டைப் பொழுது போக்கு நோக்கமாக கொண்டிருக்கிருர்களா வென்பதையும், சாதி, சமய' நிற, இன வேறுபாடுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமளிக்காமல் பாரபட்ச மற்ற முறையில் அத்தெரிவு நடைபெற்றிருக்கின்றதா என்பதையும், தெரிவுக் கோஷ்டி கட்டுக்கோப்பாக அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும், கோஷ்டியின் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் கவனிப்பதே ஒவ்வொரு தேசீய ஒலிம்பிக் குழுக்களின் அதிமுக்கிய கடமையாக விளங்குகிறது.

சர்வதேச ஒலிம்பிக்குழு, ஒலிம்பிக் விளையாட்டு நடத்தும் உரிமையை ஒரு நாட்டிற்கு அல்லாமல் ஒரு பெரிய நகரத்திற்குமாத்திரமே அளிக்கிறது. சர்வதேச ஒலிம்பிக் குழு 1963-ல் பெடனில் கூடிய பொழுது தங்கள் நகரத்தில் ஒலிம்பிக் விளையாட்டை நடத்துவதற்கு மெக்ஸிக்கோ தேசம் விண்ணப்பித்தது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தங்கள்நகர முதல்வரை அல்லது நகரத் தலைவரை எவ்விதம் தங்கள் நகரில் ஒலிம்பிக் விளையாட்டை நடத்துவது, போட்டி நடத்துவதற்கு எவ்விதமான வசதிகளும், சௌகரியங்களும் இருக்கின்றன. புதிய விளையாட்டு அரங்கங்கள் நிர்மாணிப்பதற்கு எவ்வளவு செலவாகைப் பணம் செலவிடும் என்பதை சர்வதேச ஒலிம்பிக்குழு அங்கத்தவர்களுக்கு எடுத்து விளக்குவதற்கு அனுப்பி வைப்பர். இவர்கள் விளையாட்டு அரங்க அமைப்புக்களை மாதிரிகைகள் மூலமோ, அல்லது திரைப்பட மூலமோ விளக்கலாம். ஆனால் இவர்கள் சர்வதேச ஒலிம்பிக்குழு அங்கத்தவர்களை தங்களுக்கு சாதகமாக வாக்களிக்கப்பண்ணக்கூடிய பிரயத்தனங்களைச் செய்யக்கூடாது. ஒலிம்பிக் குழுவினரால் நகர முதல்வர்களிடம் கேட்கப்படும் முதல் கேள்வி என்ன கலாச்சார நிகழ்ச்சிகளை தங்கள் நகரம் ஒலிம்பிக் விழாவின் பொழுது அளிக்கவிருக்கின்றது என்பதாம்.

பண்டைக் காலத்தில் கிரீஸில் நடைபெற்றது போல நவீன ஒலிம்பிக் விளையாட்டில் கலை நிகழ்ச்சிகள் முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றன.

## எழுந்த பிரச்சினைகளும் தீர்க்கப்பட்ட விதமும்

1963-ம் ஆண்டில், 15 நாட்களாக நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளை நிகழ்த்தும் நாடாக மெக்ஸிக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம் தெரிவு செய்யப்பட்டவுடன் பல சிக்கலான பிரச்சினைகள் எழுந்தன. அவைகளில் இரண்டு மிகமுக்கியமானதாக இருந்தன. முதலாவதாக கடல் மட்ட உயரம் பற்றிய அபிப்பிராய பேதமாகும். கடல் மட்டத்திலிருந்து 7348 அடி உயரத்திலிருக்கும் உலகத்தில் உயரமான, பெரிய நகரமான மெக்ஸிக்கோநகரிலே காற்று இலேசாக இருப்பதால் அங்கு செல்லும் உல்லாசப் பிரயாணிகளுக்குச் சுவாசிப்பதில் வில்லங்கம், பார்வை மங்கல், மயக்கநிலை ஏற்படுவதாகவும், கடல் மட்டத்திலும் பார்க்க காற்றில் 8 வீதம் பிராணவாயு குறைவாக இருப்பதால் விளையாட்டு வீரர்களின் சாதனைகள் பாதிக்கப்படும் என்றும், சடுதி மரணம் நேரக் கூடும் என்றும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.

1954-ம் ஆண்டில் 4 நிமிட்ங்களுக்கு குறைவாக ஒரு மைல் தூரத்தை ஓடிய இங்கிலாந்து நாட்டு வீரர் டாக்டர் ரோகர் பனிஸ்ரர் "உயர்ந்த பூமியில் நீண்ட நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு தாங்களே கெடுதியைத் தேடிக் கொள்கிறார்கள்" என அபிப்பிராயப்பட்டார். 1956 மெல் போன் நகர 3000 மீற்றர் செங்குத்தோட்ட ஒலிம்பிக் வெற்றி வீரரானகிறிஸ்தோப்பர் பிறசர் இக் கருத்தை ஆமோதித்தார். உலகின் எல்லாப் பகுதியிலுமுள்ள விளையாட்டுத் துறை விமர்சகர்கள் இக்கருத்தை வற்புறுத்தினர். நீண்ட தூர ஓட்ட வீரர்களுக்கு சிறு அசௌகரியம் தொடக்கம் சடுதி மரணங்களும் நிகழக் கூடுமென விளையாட்டைப் பற்றி விபரங்களையும் வெளியிட்ட விஞ்ஞானம் பிரபந்தம் முன்னறிவித்தல் செய்தது. 1960 திலும் 1964 விலும் ஒலிம்பிக் மரதன் ஓட்டத்தில் வெற்றிபெற்ற எத்தியோப்பிய வீரன் அபிபி பிக்கிலா, கெனியாவைச் சேர்ந்த 3,000 மீற்றர் உலக சாதனை ஓட்ட வீரர் கிப்சோகே கெயினோ போன்றவர் உயரமான தேசங்களில் வசிக்கும் வீரர்களுக்கு சாதகமாக அமையுமென பல தேசங்களில் கருத்துத் தெரிவித்தன.

இப்பிரச்சினையை திட்டபூர்வமாக ஆராய்ச்சி செய்து உண்மையை அறிவதற்காக பிரித்தானியா ஒலிம்பிக் குழு வைத்தியர்கள், விளையாட்டு வீரர்கள், மலைஏறிகள் அடங்கிய ஒரு கோஷ்டியை மெக்ஸிக்கோ நாட்டுக்கு அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தது. இது போன்ற பரிசோதனையை ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஜெக்கிப் பகுதியில் செய்து பார்த்தார்கள். ருசியா, சுவீடன், ஜப்பான், இத்தாலி, நாடுகள் உடற்கூற்றுவல்லுனர்களும் தாங்கள் தாங்களாக பரிசோதனைகள் நடத்திப் பார்த்தார்கள்.

ஆராய்ச்சிகளின் முடிவு மெக்ஸிக்கோ நாட்டிற்கு சாதகமாக அமைந்தது. உயர்ந்த பூமியில் விளையாட்டு வீரர்களுக்கு ஒரு மாதகால பயிற்சி அளித்தால் அவர்களின் உடல் நிலை பாதிக்கப் படமாட்டாதென அறிவிக்கப்பட்டது. கடல் மட்டத்திலும் பார்க்க உயர பூமியில் இலேசான காற்றின் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதால் ஓட்டம், பாய்தல் எறிதல் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் வீரர்கள் இங்கு திறமாகச் செயயக் கூடியதாக இருக்குமெனவும், ஆனல் தூர ஓட்டப் போட்டி நிகழ்ச்சிகள் உதாரணமாக 800 மீற்றர் ஓட்டப் போட்டி போன்றவற்றின் சாதனையை முறியடிப்பது அபூர்வமாக இருக்குமெனவும ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இதற்குக் காரணம் பிராணவாயுக் குறைவே என ஐக்கிய அமெரிக்கா கோஷ்டியின் தலைமை வைத்திய அதிகாரி டாக்டர் டானியல் எவ். கான்லி தெரிவித்தார்.

இரண்டாவது பிரச்சினை ஒலிம்பிக் தெரிவில் நிறத்துவேஷம் கடைப்பிடிக்கப்படுவதால் அமெரிக்க நாட்டின் கறுத்த இனத்தவரும் ருசியாவும் இவ்விழவைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்தனர். இச்சிக்கலைத் தீர்ப்பதில் மெக்ஸிக்கோ நாடும் சர்வதேச ஒலிம்பிக் குழுவும் விழிப்புடனும் நெறி தவருதும் செயலாற்றின. மெக்ஸிக்கோ நாடு கலப்பு இனத்தவர்களைக் கொண்ட நாடாகவும் சாதி, நிற, துவேசமற்ற ஒரு தேசமாகவும் உலகில் விளங்கி வருகிறது. ஒலிம்பிக் விளையாட்டு புத்துயிர் அறிக்கைப்பட்டி 1896 தொடக்கம் ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றுபவர்களிடையே நிற, இன துவேஷம் பாரபட்சம் காட்டாமல் அனைவரும் சமம் என்ற அசைக்க முடியாத கொள்கையை உறுதியாக சர்வதேச ஒலிம்பிக் குழு கடைப்பிடித்து வருகிறது. இருந்தும் சர்வதேசக் ஒலிம்பிக் குழுவின் தீர்மானம் ஒரு நெருக்கடி நிலையை உண்டாக்கி எதிர்பாராத விதமாக தற்காலிகமாக 1968-ம் வருடம் நடை

பெற்ற ஒலிம்பிக் போட்டியை ரத்துச் செய்கிற நிலபரத்தை உண்டாக்கியது.

தென் ஆபிரிக்க நிறத்தவர்களில் உள்ள விளையாட்டு வீரர்களைப் பங்குபற்றச் செய்வதற்காக சர்வதேசக் ஒலிம்பிக்குழு போராட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதினால் அக்குழு விவாதத்திற்குரிய ஒரு முடிவை எடுத்தது. 1964 ல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்கு வீரர்களைத் தெரிவு செய்வதில் நிற வித்தியாசத்தைக் கடைப்பிடித்து ஒலிம்பிக் விதிகளை மீறியதினால் தென் ஆபிரிக்காவை 1964ல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அனுமதிக்க முடியாதென 1963-ம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் குழு முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து தென் ஆபிரிக்க ஒலிம்பிக் குழு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் முடிவுக்கு தலை வணங்கியது. விளையாட்டு வீரர்கள் கோஷ்டி தெரிவு செய்யப்படும் பொழுது நிற வித்தியாச பாரபட்சமில்லாமல் சகல இனத்தவர்களிடமிருந்தும் தெரிவதெனவும், நிறத்தவர்களையும், வெள்ளையர்களையும் சம அளவாகக் கொண்ட ஒரு நடுவர் குழு இத்தெரிவை நடத்தவும் உடன்பட்டார்கள். தென் ஆபிரிக்க ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் ஒன்றாகப் பிரயாணம் செய்து, ஒன்றாக வசித்து ஒரே கொடியின் கீழ் ஒன்றாக பவனி வருவார்களென உறுதியளித்தனர்.

1967-ம் ஆண்டு ஒரு ஐரிஸ்காரரும் இரு கறுப்பர்களும் கொண்ட சர்வதேச ஒலிம்பிக் குழுவின் பரிசீலனை இயக்குனர்சபை தென்னாபிரிக்காவுக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்து ஒலிம்பிக் விதிகள் பூரணமாக அனுசரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். சர்வதேச ஒலிம்பிக் குழுவின் 81 வயதுத் தலைவர் திரு. ஆவரி புருண்டேச் அவர்கள் இனவெறியை நசுக்கி வெற்றி கண்டு விட்டதாக உணர்ந்தார். 71 அங்கத்தவர்களைக் கொண்ட அக்குழு திரும்பவும் தென்னாபிரிக்காவை ஒலிம்பிக் போட்டியில் சேர்த்துக்கொள்வதென பெரும்பான்மை வாக்குகளால் முடிவு செய்தது.

இந்த பெரும்பான்மை முடிவு வெடி மருந்து தூளுக்குள் நெருப்புப் பொறி விழுந்த நிலையை ஏற்படுத்தியது. இத்தீர்மானம் மாற்றப்படா விட்டால் 32 ஆபிரிக்க நாடுகளும் 1968 ஒலிம்பிக் விளையாட்டை பகிஷ்கரிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதாக அறை கூவின. சோவியத் ருசியாவும் இதைப்பற்றி தனது விளையாட்டுக் கோஷ்டியையும் வாபஸ்வாங்க முன் வந்தது. ஐக்கிய அமெரிக்க நீக்கிரோக்களும் மெக்ஸிக்கோ நகர் போட்டியில் பங்கு பற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த பகிஷ்கார பயமுறுத்தல்கள் மெக்ஸிக்கோவின் கவனத்தை ஈர்த்தது. ருசியா விளையாட்டு கோஷ்டியின் வாபஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை மிகவும் மோசமாகப் பாதிக்குமென உணர்ந்தனர். 1964-ம் ஆண்டு டோக்கியோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ருசியா நாடு 96 பதக்கங்களைப் பெற்ற பொழுது ஐக்கிய அமெரிக்க நாடுகள் 90 பதக்கங்களை மாத்திரம் பெற முடிந்தது. இதே போன்று ஐக்கிய அமெரிக்க நீக்ரோக்களின் பகிஷ்கரிப்பு ஐக்கிய அமெரிக்காவின் விளையாட்டுக் கோஷ்டியை பெரிதும் பலவீனப்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தவிருந்தது.

இந்த நெருக்கடியைத்தவிர்ப்பதற்காக மெக்ஸிக்கன் ஒலிம்பிக்குழு இது விடயமாக புருண்டேச்சை கண்டது. இதைத் தொடர்ந்து சுவிட்சலார்ந்து நாட்டில் நடந்த தொடர்பான இரு நாள் கூட்டத்தில் சர்வதேச ஒலிம்பிக்குழுவின் நிருவாக சபை தென்னாபிரிக்காவை 1968 ஒலிம்பிக் விளையாட்டில் பங்குபற்ற அனுமதிப்பதில்லை என ஏகமனதாகத் தீர்மானித்தது. இத்தீர்மானத்தின்படி இருமாதங்களுக்கு முன்பு சேர்த்துக் கொள்ளப்பட்ட தென்னாபிரிக்க நாட்டை திரும்பவும் விலக்கினர்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் செயலை ருசியாவும் ஆபிரிக்க நாடுகளும் மனமகிழ்ச்சியுடன் வரவேற்றனர். வேறுசில நாடுகளுக்கு இம்முடிவ அதிர்ச்சியையும் திகிலையும் உண்டாக்கியது. அரசியல் நிர்ப்பந்தத்தின் பேரில் ஒலிம்பிக் விதிகள் மாற்றப் பட்டுள்ளதென்ற ஆபத்தான எடுத்துக் காட்டாக அமைந்துவிட்டதென அநேக பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கம் வரைந்தன. நிர்ப்பந்தத்தினால் சர்வதேச ஒலிம்பிக் குழு பயந்துவிட்டதென்ற குற்றச்சாட்டை புருண்டேச் மறுத்துள்ளதுடன் அருவருக்கத்தக்க பலாத்காரம் தலைவிரித்தாடாமல் தடுப்பதற்கே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவம்

—காரை செ. சுந்தரம்பிள்ளை

விடாதந்த விளைஞனையே வீட்டில் வைத்து
வீணாக எனது பொருள் தனைச்சி தைத்தாள்
"அடாது இது அநியாயம்" என்று சொன்னேன்
அரும் பொருளை விடஅழகு பெரிதோ என்றேன்
தடாதுநான் இருந்திருக்க லாமோ ஐயா
தரித்திரம்தான் வந்தெமக்குச் சேர்ந்தி டாதோ
கொடாது அவன் கொஞ்சிடக்காண் பேனே தீயின்
கொழுந்திலே வீழ்ந்துயிரை மாய்த்தி டேனே

## கல்லானர்

மனதுவிட்ட வழிநடக்க வாய்ப்பே யில்லா
மாபாவி யாய்ப்பிறந்து விட்ட பின்னர்
உனதுபொருள் உனதுறவு உனது சுற்றம்
ஒப்பில்லா வினியகலை ஞான மெல்லாம்
எனதுதுயர் போக்கிடுமோ என்றாள் நைந்தாள்
ஏன்பிறந்தேன் இதுவிதியோ இதுதான் வாழ்வோ
தனதுசுய நலத்திற்காய்த் தகாத பாதை
தனில்தூண்டும் இவள்எனக்குத் தாயோ என்றாள்

இசையோடு எழிலோடு இன்பத் தோடு
இனிக்கின்ற பொருளோடு இனிய வாழ்வு
வசையோடு வடுவோடு வஞ்சத் தோடு
வாலிபரின் உயிரோடு வருவ தானல்
நசையோடு நட்போடு நாடு வேனே
நரகத்தில் வீழவுளம் ஒப்பு வேனே
தசையோடு எனைவிற்று வாழ வென்றே
தாயேநீ பெற்றாயோ சாற்று வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமை கலேக்காகக் கழிவ தானுல்
கவலேயில்லே கன்னியெனேப் போற்று வார்கள்
தொட்டிளமை துய்க்கவரும் செல்வர்க் கெல்லாம்
சுகம்கொடுத்துப் பணம்பறித்த பின்னர், என்னே
விட்டிளமை கழிந்திட்டால் வேசி யென்று
வீதியிலே வெளியிடத்தே வீட்டி லேயும்
தொட்டிளமை சுவைத்தோரும் சொல்வர் அந்தச்
சொல்லம்பைத் தாங்காதென் னுள்ள மம்மா

ஆசைவலே வீசினுள் அடிமை யானேம்
ஆதரவு நல்கினுள் அவள்உ வக்கக்
காசையெல்லாம் வீசினேம் கன்னி தந்த
காதலுக்காய் ஏங்கினேம் கபடத் தாலே
வேசையெலாம் பற்றினுள் வெறுங்கை யோடு
வெளியேற்றி ஞள்இன்று வீதி தோறும்
நாசமதாய் அலேகின்றேம் நன்றி கெட்ட
நாயாலே என்பர்இது நன்றே அம்மா

எண்ணிரண்டைத் தாண்டாத இளமை என்தன்
இதயத்தைத் தூண்டாதா எனது வாழ்வு
கண்ணிரண்டை விட்டகலாக் காளே யோடு
காலமெலாம் காதலுடன் கழிதல் தீதோ
பெண்ணிரண்டை ஆடவர்கள் மணம் புரிந்தால்
பெண்களுமே யப்பிழையைச் செய்ய லாமோ
புண்ணிரண்டா ? என்விழிகள் பொய்மை யோடு
புன்தொழிலேச் செய்வதற்குப் புவியின் மீதே

துணேயில்லா வாழ்க்கைபெருந் துன்பம் நல்கும்
சுகமில்லா வாழ்க்கையது தூசு வாழ்க்கை
இணேயில்லா ஆடவனே எனக்காய் வாழும்
இத த்தைக் கொண்டவனே எறிந்து விட்டுக்
கணேயில்லாச் சிலேபோல வாழச் சொல்லிக்
கடமையென்று கூறுகிருய் கண்ணில் லாய்நீ
சுணேயில்லாய் துணேபிரிக்கும் துரோகி உன்னுல்
துறவறத்தை மேற்கொண்டேன் என்ருள் வந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையுருகும் மங்கையவள் கதையைக் கேட்டால்
மகள்உருக வில்லைமனம் மாற வில்லை
சிலையுருகும் சிந்தியகண் ணீரைக் கண்டால்
சேயுருக வில்லையுளந் திரும்ப வில்லை
அலைகடலு மோய்ந்திருக்கும் அழுகை கண்டால்
அன்புமகள் அசையவில்லை அவளைப் பெற்ற
விலைமகளோ வேறுவழி யின்றி யுள்ள
வேதனையோ டின்னுமடி பணிந்து சொல்வாள்

என்மகளை என்னுயிரை இதயக் கோயில்
இருக்கின்ற பொற்சிலையை எங்கள் வாழ்விற்
கின்னமுதை ஈடில்லாத் திருவி ளக்கை
இலங்குமெழி லுடையாளை இனிய தேனை
கன்னலொடு பாகனைய கன்னி யாளைக்
கானகத்தே கைவிட்டுப் போவே னோநான்
உன்னடியில் என்னுயிரை மாய்த்தி டேனோ
உளம்மாறி யிவள்இன்று திரும்பா விட்டால்

நன்றுசொன்னேன் நங்கையிவள் வாழ வென்று
நான்வாழ்ந்த நல்லவழி நான்மு கன்தான்
அன்றெமது குலமதனைப் படைக்கும் போது
அழியாத மையாலே கடமை யென்று
இன்றுரைத்த வாறெல்லா மெழுதி னனும்
என்னன்னை யோடுபலர் சொன்னார் என்றாள்
கன்றிழந்த பசுவானாள் கணிகை அந்தக்
கதையாலே கல்லானார் முனிவ ரங்கே

## எரியில் இறப்பேன்

கணைபட்ட மான்போலக் கதறு கின்ற
கணிகையவள் துயர்கண்டு கற்றுத் தேர்ந்த
இணையற்ற மாமுனிவன் இரக்கங் கொண்டு
எழில்மானே ! காமமஞ் சரியே கேளாய்
துணையற்ற கானகத்தே துணிவு கொண்டு
துறவறத்தில் இறங்குதற்கு வந்து விட்டாய்
பிணியுற்ற உன்தாயைச் சுற்றத் தாரைப்
புறக்கணித்தல் தீதவரைப் பேணு வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவுடல் கொண்டவர்கள் மண்ணின் மீது
மாதவத்தைச் செய்தடையும் முத்தி யொன்று
புனிதமுடன் கடமையதைச் செய்தாற் கிட்டும்
பெரும்போக பூமியிரண் டாவ தாகும்
நனிசிறந்த பேறுகளில் முத்தி யெய்தல்
நரிக்கொம்பு ஞானமுடன் நலிவே யின்றிப்
பனிகாற்று மழைவெய்யில் பந்த பாசம்
பற்றுதுயர் விட்டாலே பயன ளிக்கும்

கானகத்தில் துறவறமோ கனலின் மீது
கால்வேக நடத்தலினை யொக்கும் சுத்த
ஞானமதைக் கொண்டபலர் துறவு பூண்டு
நாடரிய முத்தியினைக் காண வில்லை
ஈனவுடல் கொண்டபயன் காண வேண்டில்
இவ்வுலகில் கடமைதனைச் செய்ய வேண்டும்
மோனநிலை யாலடையும் முத்தி கிட்டா
மோட்சமதை யடையலாம் முயன்றிட் டாலே

அனிச்சம்பூ வடிநோகும் அடவி தன்னில்
அரம்போலும் கல்லுதிரம் சிந்த வைக்கும்
இனிக்கின்ற வாழ்வல்ல இன்னல் சேரும்
எரிகின்ற கானகத்தே யெந்த நாளும்
கனைக்கின்ற கொடிய விலங்குண்டு கண்டால்
கடிக்கின்ற பாம்புண்டு கலையறிந்தோய்
நினைக்கின்ற நிம்மதியோ கிட்டா திந்த
நீழடவி தனில்எண்ணிப் பார்த்தி டம்மா

துன்பத்தை யறியாத சொர்க்க வாழ்வைச்
சுவைத்திட்ட தங்கையயே துறவ றத்தால்
இன்பத்தைக் காணலாம் என்று நீயும்
இதயத்தை மாற்றுதே இந்த நேரம்
தென்பற்ற வுள்ளத்தால் சினத்தால் சிக்கித்
சிதைந்துள்ள பாசத்தால் சாந்தி யின்றி
என்பற்ற புழுப்போல எரியில் வீழ
எண்ணுகிறாய் இதனாலே லாப மில்லை

(வளரும்)

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பணத்தை

## யாழ்ப்பாண கூட்டுறவு மாகாண வங்கியில்

## சேமியுங்கள்

**நிலையானவைப்பு:** 3, 6, 12 மாதங்களுக்கு நிலையாக வைக்கும் வைப்புக்களுக்கு வட்டி முறையே $1\frac{1}{2}\%$, $2\frac{1}{2}\%$, $3\frac{1}{2}\%$ ஆகும். 5 வருடங்களுக்கும், அதற்கு மேலும் நிலையாக வைக்கும் பணத்திற்கு 4 வீதமும், 10 வருடங்களுக்கும், அதற்குமேலான கால வைப்புக்கும் வட்டி $4\frac{1}{2}\%$ வீதமும் கொடுக்கப்படும்.

**சேமவைப்பு:** சேமவைப்பிற்கு $3\frac{1}{4}\%$ வட்டி 1-7-69இல் இருந்து வழங்கப்படுகிறது. இவ்வைப்பிலிருந்து நாளாந்தம் பணத்தை எடுப்பதற்கு வசதி உண்டு.

தாபனங்களுக்கு மிகக் குறைந்த மிச்ச இருப்பு ரூபா 5000/- மாக இருக்கும் மாதங்களுக்கு 4% வட்டி வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு $4\frac{1}{2}\%$ வட்டி வழங்கப்படும்.

**பிணைவைப்பு:** சங்கங்களின் பிணைவைப்பிற்கு $3\frac{1}{2}\%$ வட்டி வழங்கப்படும்.

**நகை அடைவு பிடித்தல்:** வங்கியின் எல்லாக் கிளைகளிலும் நகை அடைவு பிடிக்கப்படுகின்றது. வட்டி 11 வீதம். எடுத்த பணத்தைப் பகுதி பகுதியாகவும் திருப்பிச் செலுத்தலாம்.

**கிளைகள்**

யாழ்ப்பாணம், பரந்தன், சுன்னுகம், பருத்தித்துறை (நெல்லியடி), சாவகச்சேரி, சங்கானை, ஊர்காவற்றுறை, வலி-கிழக்கு (ஆவரங்கால்) முதலிய இடங்களில் உண்டு.

தலைமைக் காரியாலயம்:

**59, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**



Edited & published by T. SEENIVASAGAM, B.A., J.P. residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Northern Division Co-operative Federation, Ltd.. K. K. S Road, Jaffna and printed at the N. P. Co-op. Ptg. & Pub. Socy., Ltd., Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் "பென்சன்"!

'வசதிக்கேற்ப பணம் கட்டும்'
தேசிய உபகாரச் சம்பளக் காப்புறுதிப் பத்திரம்
ஒன்று வாங்குங்கள்.

நீங்கள் என்ன ஊழியம் செய்பவராக இருப்பினும் எவ்வளவு ஊதியம் பெறுபவராக இருப்பினும் உங்கள் ஒவ்வொருவருக்கும் உதவிபுரியும் திட்டமிது. காப்புறுதித் தவணைக் கட்டணத்தை ஒழுங்காகக் கட்ட வேண்டுமென்ற கட்டாயமில்லை ; வசதிப்படி, வசதியான நேரத்தில் கட்டலாம். இவ்வாறு சிறு சிறு தொகைகளைக் கட்டி வயோதிபக்காலத்தில் கவலையின்றி வாழ்வதற்கு வழி செய்து கொள்ளுங்கள். வேண்டுவதெல்லாம், ஒரு பிரேரணைப் பத்திரம், பிறப்புச் சான்றுப்பத்திரம் என்பன மட்டுமே. வைத்தியப் பரிசோதனை கூடத் தேவையில்லை.

விவரங்களுக்கு :

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
288, யூனியன் பிளேஸ்,
**கொழும்பு 2**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org